

# காச நோய் தொடர்பாக அடிக்கடி முன்வைக்கப்படும் கேள்விகளும் அவற்றுக்கான பதில்களும்

## 1. காச நோய் என்றால் என்ன?

காச நோய் என்பது "மைக்கோபக்றீரியம் ரூபெர்குளோசிஸ்" எனப்படும் காசநோய் பக்றீரியாவினால் ஏற்படுத்தப்படும் ஒரு தொற்று நோயாகும். அதிகூடிய இதன் வடிவம் சுவாசப்பை காசநோயாகும் (அண்ணளவாக 70%). ஊதாரணமாக இதன் ஏனைய வடிவங்களாக, நிணநீர் முடிச்சு காசநோய் அல்லது எலும்புக் காசநோய் உள்ளன என்பதுடன் இவை தொற்றக் கூடியவை அல்ல.

## 2. மறைந்தநிலையிலுள்ள காச நோய்தொற்று என்றால் என்ன?

மறைந்தநிலையிலுள்ள (லற்றென்ற்) காசநோய் தொற்று என்றால் ஒருவர் தனது வாழ்நாளில் எப்பொழுதாவது காசநோய் பக்றீரியாவுடன் தொற்றுக்குள்ளாகி அதன் மூலம் பரவப்பட்டுள்ளதென்று பொருள்படும். இந்த நிலையில் இந் நபர் நோயினால் பீடிக்கப்பட்டவரென்றோ இது தொற்றிப் பரவுமென்றோ இல்லை. இதனால் தொற்றுக்குள்ளான அனேக-மானோர் (அண்ணளவாக 90%) ஒருபொழுதுமே காச நோய்க்குள்ளாகி பீடிக்கப்படுவதில்லை.

## 3. காசநோய் எவ்வாறு பரவுகின்றது?

காச நோய் பக்றீரியாக்கள் மனிதனிலிருந்து மனிதனுக்கு காற்றின் மூலம் பரவுகின்றது. இந் நோயினால் பீடிக்கப்பட்ட நபர் இருமும் பொழுது காசநோய் பக்றீரியாக்-களையுடைய மிகச்சிறிய துளிகளை சுற்றுப்புறத்திலுள்ள காற்றில் பரவ விடுகின்றார். இவை காற்றில் குறிப்பிட்ட நேரத்திற்கு பறந்து திரிவதுடன் ஏனைய மனிதர்களினால் சுவாசிக்கப்படுகின்றன. இவ்வாறு சுவாசப்பை காசநோயினால் பீடிக்கப்பட்ட ஒரு நபருடன் தொடர்பு ஏற்படும் பொழுது மட்டுமே இது தொற்றிப் பரவுவதற்கான அபாயம் ஏற்படுகின்றது (வினா 6)

## 4. காச நோயினால் பீடிக்கப்பட்டிருத்தல் என்று எப்பொழுது கூறப்படுகின்றது?

பக்றீரியாக்கள் சுவாசப்பையில் பரவும் பொழுது காசநோய் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.தொற்று ஏற்பட்டு பல மாதங்கள் அல்லது வருடங்கள் கூட இதற்கு எடுக்கலாம். குருதிச் சுற்றோட்டத்தின் மூலமாக காசநோய் பக்றீரியாக்கள் உடலின் ஏனைய பகுதிகளுக்கு (உதாரணமாக நிணநீர்முடிச்சு, மத்திய நரம்புத்தொகுதி, எலும்பு) பரவலாம்.இவ் வகையான காசநோய் தொற்றக் கூடிய வகை அல்ல. காசநோய் ஆபத்தானது, முக்கியமாக சிறு குழந்தைகளுக்கும் நோய்எதிர்ப்புசக்தி குறைபாடுடையவர்களுக்கும். சரியான முறையில் சிகிச்சையளிக்கப்படும் பட்சத்தில் காசநோய் இன்று குணப்படுத்தப்படக் கூடியதொன்றாகும்.

## 5. காசநோயினால் பீடிக்கப்பட்டிருத்தலுக்கான வழமையான அறிகுறிகள் எவை?

அநேகமாக இந் நோய் குறைந்தளவான அறிகுறிகளுடனேயே தொடங்குகின்றது. இருமல் (சிலவேளைகளில் இரத்தம் கலந்திருத்தல்), சோர்வு, மெல்லிய காய்ச்சல், இரவில் வியர்த்தல் போன்றன இவற்றுக்கரிய அறிகுறிகளாகும். நோயின் அடுத்த கட்டத்தில் வேறு அறிகுறிகளாகிய நிறைகுறைதல், உணவுக்கு விருப்பமின்னை நெஞ்சில் நோவு போன்றன ஏற்படலாம்.

## 6. தொற்றிப்பரவும் சுவாசப்பை காசநோய் என எப்பபொழுது கூறப்படுகின்றது?

இந் நோயால் பீடிக்கப்பட்ட நபர் இருமும் பொழுது (முக்கியமாக தும்மும் பொழுது) காசநோய் பக்றீரியாக்களை வெளியேற்றினால் அவரது நோய் சுவாசப்பையில் தொற்றக் கூடியதான காசநோயாக முதிர்ச்சியடைந்துள்ளதென கூறப்படுகின்றது. இந்த படிநிலையிலேதான் நோயினால் பீடிக்கப்பட்ட நபரிலிருந்து காசநோய் ஏனைய மனிதர்களுக்கு தொற்றிப் பரவ முடியும் (வினா 3).

## 7. தொற்றிப்பரவும் சுவாசப்பை காசநோயினால் பீடிக்கப்பட்ட ஒருவர் எவ்வளவு காலத்துக்கு தொற்றக் கூடியதாக இருப்பார்?

தொற்றிப் பரவக்கூடிய சுவாசப்பை காசநோயால் பீடிக்கப்பட்ட ஒருவர் வீட்டில் அல்லது வைத்தியசாலையில் தனிமைப்படுத்தப்படுவார், அதாவது இவர் அவரது சுற்றுப்புறச் சூழலிலிருந்து முழுமையாக தனிமைப்படுத்தப்படுவார். இவரது தொற்றுந் தன்மை இல்லாது போகும் வரையிலும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருப்பார். சாதாரணமாக இதற்கு இரண்டு முதல் மூன்று வாரங்கள் எடுக்கும். அதற்குப் பின் இது தொற்றக் கூடியதொன்றல்ல. ஆயினும் இவர் தொடர்ந்து மொத்தமாக ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேல் பூணர குணமடையும் வரையிலும் மருத்துவரின் அவதானிப்பிலிருந்து சிகிச்சை தொடரப்படல் வேண்டும்.

## 8. யாருக்குத் தொற்றும் அபாயம் உள்ளது?

தொற்றக் கூடியதான சுவாசப்பை காசநோயினால் பீடிக்கப்பட்ட ஒரு நபருடன் (பல மணித்தியாலங்கள் வரை ஒரே அறைகளிலிருந்து) மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்த நபர்களுக்கு மட்டுமே இந் நோய் தொற்றுவதற்கான அபாயம் உள்ளது (வினா 6)

### 9. எனக்கு தடுப்பூசி போடப்பட்டது. அப்பபடியிருந்த பொழுதிலும் நான் தொற்றுதலுக்குள்ளாகலாமா?

ஆம், ஏனெனில் முன்பு காசநோய்க்கெதிராக வழக்கமாக போடப்பட்டுவந்த தடுப்பூசி (பீசீஜி) மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட பாதுகாப்பினையே வழங்குகின்றது.

### 10. நான் சுவாசப்பை காசநோயினால் பீடிக்கப்பட்ட ஒரு நபரொருவருடன் தொடர்பு வைத்திருந்தேன். நான் என்ன செய்ய வேண்டும்?

உங்களது மாநிலத்திலுள்ள மாநில „லுங்கென்லீகா“ எனப்படும் காசநோய் நிபுணத்துவ நிலையம் காசநோய் தொடர்பாக இலவசமான ஆலோசனைகளையும் தகவல்களையும் வழங்குவதுடன் இது தொடர்பான சகல கேள்விகளுக்கும் பதிலளிக்கும். சுவாசப்பை காசநோயால் பீடிக்கப்பட்ட ஒருவருடன் யார் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தாரோ (வினா 6), அவர் காசநோய் நிபுணத்துவ நிலையத்துடன் தொடர்பு கொண்டு ஒரு தவணையை (திகதி) வைத்து நீங்கள் தொற்றுதலுக்கு உள்ளாகியிருக்கின்றீர்களா எனப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவதுடன் தகவல்களையும் அறிந்து கொள்ள முடியும்(வினா 12).

### 11. சுவாசப்பைக்கு வெளியே காசநோயால் பீடிக்கப்பட்ட ஒரு நபருடன் நான் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தேன். நான் என்ன செய்ய வேண்டும்?

உங்களுக்கு இதனால் எந்த ஆபத்தும் ஏற்படாது என்பதனால் நீங்கள் மேலதிகமாக எதனையும் செய்யவேண்டியதில்லை. இவ்வாறான வகையையுடைய காசநோய்கள் தொற்றக்கூயவை இல்லை. ஏனெனில் காற்றின் மூலம் பரவும் காசநோய் பக்றீரியாக்கள் எதனையும் இவ் வகையில் பீடிக்கப்பட்டவர்கள் வெளியேற்றுவதில்லை என்பதனால்.

### 12. தொற்று ஏற்படுதல் எவ்வாறு நிரூபிக்கப்பட முடியும்?

காசநோய்தோல்பரிசோதனை (ரூபெகுலின் தோல்பரிசோதனை) அல்லது இரத்தப்-பரிசோதனை (இது காமா இன்ரெவெறோன் ரெஸ்ட் எனவும் கூறப்படுகின்றது) மூலம் தொற்று ஏற்பட்டிருத்தல் நிரூபிக்கப்பட முடியும். பரிசோதனை நடைமுறைகள் தொடர்பான தகவல்களையும் பரிசோதனை பெறுபேறுகளை விளக்குதல் தொடர்பாகவும் உங்களது மாநில „லுங்கென்லீகா“ இன் காசநோய் நிபுணத்துவ நிலையத்தில் கேட்டறிந்து கொள்ள முடியும்.

### 13. ஏன் தொற்றக்கூடிய சுவாசப்பை காசநோயால் பீடிக்கப்பட்ட ஒருவருடன் கடைசியாக தொடர்பைக் கொண்டிருந்த பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட நபரொருக்கு எட்டு வாரங்களின் பின் காசநோய்தோல் பரிசோதனை மற்றும் /அல்லது இரத்தப்-பரிசோதனை மேற்கொள்ளப்-படுகின்றது?

காசநோய் பக்றீரியாக்கள் மிக மெதுவாகவே பெருகுவதுடன் நோய்த்தடுபியல் பிரதி-பலிப்புக்கு பல வாரங்கள் எடுக்கின்றன. எனவே நோய் தொற்றியிருக்கின்றதா என்பது எட்டு வாரங்களின் பின்னரே நிரூபிக்கப்பட முடியும். பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர் குழந்தைகளுக்கு ஆபத்தான காசநோய் வகைகள் ஏற்படுவதற்கான அபாயம் அதிகமாகும். இது தவிர இவ் வயதில் நோய் விரைவாக ஏற்படுகின்றது. எனவே பாதுகாப்பின் நிமித்தம் இவர்களிடத்தில் முதலாவது பரிசோதனை ஒன்று இறுதியாகத் தொடர்பேற்பட்ட உடனேயே மேற்கொள்ளப்-படுகின்றது. பரிசோதனை முடிவுகளுக்கேற்ப எட்டு வாரங்களின் பின் மீண்டும் நடக்கும்.

### 14. இரத்தப்பரிசோதனையின் பெறுபேறு (பொசிற்றிவ்) நேர்மறையானது. இதன் பொருள் என்ன? அத்துடன் இனிமேல் மேற்கொண்டு என்ன நடக்கவுள்ளது?

இரத்தப்பரிசோதனையின் பெறுபேறு (பொசிற்றிவ்) நேர்மறையானது என்பதன் பொருள் காசநோய் பக்றீரியாவுடன் தொடர்பு ஏற்பட்டிருக்கின்றது என்பதாகும் (வினா 2). காசநோய் நிபுணத்துவ நிலையம் இது தொடர்பாக உங்களுக்கும் உங்களது வைத்தியருக்கும் அறிவிப்பதுடன் காசநோய் இருக்கின்றதா இல்லையா என்பதனை உறுதிப்படுத்து முகமாக மேலதிக விளக்கங்களுக்கென (ஏக்ஸ்றே போன்றன) ஒரு தவணை (திகதி) யினை நிர்ணயம் செய்வதற்கு வேண்டிக் கொள்ளும்.

### 15. நான் தொற்றுதலுக்குள்ளாகி இருக்கின்றேன். இதன்மூலமாக நான் ஏனைய நபர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்த முடியுமா?

இல்லை! தொற்றுதலுக்குள்ளாகி இருத்தல் என்றால் காசநோயினால் பீடிக்கப்பட்டதன்றோ அல்லது இதன் மூலம் மற்றவர்களுக்கு தொற்றுதல் ஏற்படுத்தப்படலாமென்றோ பொருளல்ல (வினாக்கள் 2, 4, 6). எனவே இரத்தப்பரிசோதனையின் பெறுபேறு (பொசிற்றிவ்) நேர்மறையானது என்பதனால் உங்குளுக்குரிய நெருங்கியவர் (பராமரிப்பாளர்) க்கு இதனால் ஆபத்தென்பதற்கில்லை.

### 16. நான் தொற்றுதலுக்குள்ளாகி-யுள்ளேன். எவ்வளவு தூரம் நான் காசநோயினால் பின்னர் எப்பொழுதாவது பீடிக்கப்பட்டு நோய்வாய்ப்படுவதற்கான அபாயம் எனக்குள்ளது ?

நோய்எதிர்ப்பு சக்தியினால் இந்த பக்றீரியா கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்படுகின்றது. இது ஒரு வகை „தூக்கநிலை“ இல் இருக்கின்றதெனலாம். தொற்றுதலுக்-குள்ளாகிய 90 % வீதமானோர் காசநோயால் பீடிக்கப்படுவதில்லை. 10 % வீதமானோர் காசநோய்க்காளாகின்றனர். இவர்களுள் அரைவாசிப்பேர் இரண்டு வருடங்களுக்குள் காசநோய்க்குள்ளாகின்றனர். மற்றைய அரைவாசிப்பேரும் தமது வாழ்நாளில் பின்னர் எப்பொழுதாவது இந் நோய்க்குள்ளாகின்றனர் (வினா 4). நோய்எதிர்ப்பு சக்தி போதியளவின்றி பலவீனமடையும் பொழுது (உதாரணமாக எச்ஐவீ (எய்ட்ஸ்) தொற்று ஏற்படும் பொழுது, கோர்ட்டிசோனை நீண்ட காலம் பாவிக்கும் பொழுது, „கேமோதெறப்பி „ மேற்கொள்ளப்பட்டு நோய்எதிர்ப்பு சக்தி அமுக்கப்படும் பொழுது, சர்க்கரை வியாதி, மதுபானம் மற்றும் புகைத்தல் துஸ்ப்-பிரயோகத்தின்பொழுதும்) அபாயம் அதிகரிக்கின்றது.

### 17. நான் தொற்றுதலுக்குள்ளாகி இருப்பின் சிகிச்சைக்குட்படுத்தப்பட முடியுமா?

நோய் தொற்றியிருக்கின்றதென நிரூபிக்கப்-பட்டிருப்பின் „அன்ரிபயோற்றிக்கும்“ மூலம் சிகிச்சையளிக்கப்படுகின்றது. „அன்ரி-பயோற்றிக்கும்“ ஐப் பொறுத்து சிகிச்சை நாலு முதல் ஒன்பது மாதங்கள் மேற்கொள்ளப்-படும். இச் சிகிச்சை மூலம் பின்பு காசநோய் ஏற்படுவதற்கான அபாயம் தெளிவாகக் குறைகின்றமையால் இது சிபார்சு செய்யப்படுகின்றது. இவ்வாறானதொரு சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பதனை தொற்றுதலுக்குள்ளாகிய நபரும் சிகிச்சையளிக்கும் வைத்தியரும் ஒன்றிணைந்து தீர்மானிப்பர்.

## 18. யார் (பணம்) செலுத்துவது எதற்காக?

காசநோய் தொடர்பாக ஏற்படும் செலவுகளைப் பொறுப்பேற்றல் மாநிலத்துக்கு மாநிலம் வித்தியாசமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

உங்களது மாநில „லுங்கென்லீகா“ இன் காசநோய் நிபுணத்துவ நிலையம் மாநிலத்திலே நடைமுறையிலுள்ள ஒழுங்கு விதிகளை உங்களுக்கு மனமுவந்து வழங்குகின்றது.

## 19. காசநோய் தொர்பான கேள்வி-களுக்கு மாநில காசநோய் நிபுணத்துவ நிலையத்தை தவிர சுவிஸ் மத்தியதொடர்புநிலையம் ஒன்றும் உள்ளதா?

ஆம், சுகாதாரத்துக்கான சமஸ்டி அலுவலகத்தின் பேரில் „லுங்கென்லீகா சுவிஸ“ இன் காசநோய்க்கான தகுதி வாய்ந்த மத்திய நிலையம் தேசிய மட்டத்திலான பணிகளை மேற்-கொள்கின்றது. மேலதிக தகவல்களை www.tbinfo.ch என்னும் இணையத்-தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

## 20. சுற்றுச்சூழல் பரிசோதனை எவ்வாறு நடக்கின்றது?

காசநோய் „டியக்நோசெ“ (நோய்-நிச்சயித்தல்) மேற்கொள்ளப்பட்டதும் இதனை சிகிச்சையளிக்கும் வைத்தியரும் ஆய்வுகூடமும் நோயுற்றவர் வசிக்கும் மாநிலத்தின் மாநிலவைத்தியருக்கு கட்டாயமாக அறிவித்தல் வேண்டும். பரிசோதனைப் பெறுபேறுகளின் அடிப்படையில் சுற்றுச்சுழல் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பதனை மாநில வைத்தியர் தீர்மானிப்பார். தொற்றக்கூடியதான சுவாசப்பை காசநோயாக இருக்கும் பட்சத்தில் இவ்வாறானதொரு பரிசோதனை மேற்கொள்ளப்படும். தொற்றக்குகூடிய காசநோயாயின், சம்பந்கப்பட்ட மாநிலத்தின் „லுங்கென்லீகா“ வின் காச-நோய்க்கான நிபுணத்துவ நிலையம் சுற்றுச்சூழல் பரிசோதனை ஒன்றினை மேற்கொண்டு நடைமுறைப்-படுத்துவதற்கு பணிப்புரை விடுக்கப்படும். அதன்பின் நோயுற்றவருடன் இந் நிலையம் தொடர்பு கொள்ளும். தொற்றக்கூடிய அபாயமுள்ள தொடர்புநபர்களின் பட்டியலொன்று ஒன்றிணைந்து தயாரிக்கப்படும் (வினா 8). சாதாரணமாக இவ்வாறு தொற்றும் அபாயமுள்ளவாகளாக குடும்ப அங்கத்தவர்கள், ஒன்றாக வசிப்பவர், ஒன்றாக வேலை செய்பவர்கள், ஓய்வுநேரங்களில் ஒன்றாக கூடித்திரிபவர்கள் உள்ளனர். இந் நபர்களுக்கும் இறுதியாக அறிவிக்கப்பட்டு அவர்கள் தொற்றுதலுக்குள்ளாகியுள்ளனரா என்று பரிசோதனை செய்து பார்க்கப்படும். (வினா 12).

### உங்களுக்குத் தெரியுமா...

...காசநோய் ஒரு தொற்றுநோய் எனவும் இது சுகாதாரத்துக்கான சமஸ்டிக் காரியலயத்தில்(பீஏஜீ) அறிவிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட வேண்டுமெனவும்?

...சுவிஸில் கடந்த வருடங்களில் புதிதாக காசநோய் ஏற்படும் சம்பவங்களின் எண்ணிக்கை வருடமொன்றுக்கு 500 க்கும் 550 க்குமிடையில் உள்ளதென்று?

...சுவிஸ் „லுங்கென்லீகா“ இனாலும் பீஏஜீ இனாலும் சிபார்சு செய்யப்-படுகின்ற மருந்துகளை உட்கொள்ளும் பட்சத்தில் சுவிஸில் காசநோய் நன்கு சிகிச்சையளிக்கப்படக் கூடியதொன்று எனவும்?

...ஒவ்வொரு வருடமும் உலகம் முழுவதும் (முக்கியமாக வளர்ந்து வரும் நாடுகளில்) அண்ணளவாக 1,8 மில்லியன் மக்கள் காசநோய்க்குள்ளாகி இறக்கின்றனரென்றும்?

ஏனைய மொழிகளில்FAQ தொடர்பான தகவல்படிவம்:

**Competence centre tuberculosis**
Chutzenstrasse 10
3007 Bern
Phone 031 378 20 50
Fax 031 378 20 51
tbinfo@lung.ch
www.tbinfo.ch

# காசநோய்க்கான நிபுணத்துவ நிலையங்கள்

**Aargau/Basel-Land**
Lungenliga Aargau
Tel. 062 832 49 30
tuberkulose@llag.ch
www.lungenliga-ag.ch

**Basel Stadt**
Kantonsärztlicher Dienst
Tel. 061 267 95 26
gsd@bs.ch
www.gesundheitsdienste.bs.ch

**Bern**
Tuberkulose-Beratung
Universitätsklinik für Infektiologie
Inselspital
Tel. 031 632 60 69
tb.info@insel.ch
www.infektiologie.insel.ch

**Fribourg**
Ligue pulmonaire fribourgeoise
Tel. 026 426 02 70
info@liguepulmonaire-fr.ch
www.liguepulmonaire-fr.ch

**Genève**
Centre antituberculeux, HUG
Tel. 022 372 95 44
cat.infirmieres@hcuge.ch
www.hug-ge.ch/pneumologie/tuberculose

**Glarus**
Lungenliga Glarus
Tel. 055 640 50 15
info@llgl.ch
www.llgl.ch

**Graubünden**
Lungenliga Graubünden
Tel. 081 354 91 00
info@llgr.ch
www.llgr.ch

**Jura**
Ligue pulmonaire jurassienne
Tel. 032 422 20 12
tuberculose@liguepj.ch
www.liguepj.ch

**Luzern/Nidwalden/Obwalden/Schwyz/Zug**
Lungenliga Zentralschweiz
Tel. 041 429 31 10
info@lungenliga-zentralschweiz.ch
www.lungenliga-zentralschweiz.ch

**Neuchâtel**
Ligue pulmonaire neuchâteloise
Tel. 032 720 20 50
info@lpne.ch
www.lpne.ch

**St. Gallen-Appenzell**
Lungenliga St. Gallen
Tel. 071 228 47 47
Fax 071 228 47 48
info@lungenliga-sg.ch
www.lungenliga-sg.ch

**Schaffhausen**
Lungenliga Schaffhausen
Tel. 052 625 28 03
info@lungenliga-sh.ch
www.lungenliga-sh.ch

**Solothurn**
Lungenliga Solothurn
Tel. 032 628 68 28
info@lungenliga-so.ch
www.lungenliga-so.ch

**Thurgau**
Lungenliga Thurgau
Tel. 071 626 98 98
info@lungenliga-tg.ch
www.lungenliga-tg.ch

**Ticino**
Lega polmonare ticinese
Tel. 091 825 60 25
info@legapolm.ch
www.legapolm.ch

**Uri**
Lungenliga Uri
Tel. 041 870 15 72
lungenliga.uri@bluewin.ch
www.lungenliga-uri.ch

**Valais**
Ligue pulmonaire valaisanne
Tel. 027 329 04 29
liguepulmonaire@psvalais.ch

**Vaud**
Ligue pulmonaire vaudoise
Tel. 021 623 38 00
info@lpvd.ch
www.lpvd.ch

**Zürich**
Verein Lunge Zürich
Tuberkulose-Zentrum
Tel. 044 268 20 95
tb@lunge-zuerich.ch
www.lunge-zuerich.ch

**Fürstentum Liechtenstein**
Amt für Gesundheit
Tel. +423 236 73 34
info@ag.llv.li
www.llv.li



SWISS LUNG ASSOCIATION